உ

சிவமயம்



# அமரர் திருமதி சந்திரகாந்தி பிரபாகரன்

அவர்களின்

# நினைவு மலர்

# சமர்ப்பணம்

பூவுலகம் போற்றும் பூமகளாய்
அன்புமிக்க அக்காவா'ப்
பண்பான பத்தினியாய்
நல்லதோர் மருமகளாய்
அமைதியான மைத்துனியாய்
ஆரவாரமில்லாத அண்ணியாய்
அரவணைக்கும் அன்னையாய்
சிறப்பான சிறியதாயாய்
மாண்புமிகு மாமியாய்
பாசம்மிக்க பெரியம்மாவாய்
சிறப்பான சினேகிதியாய்
சிறந்ததோர் ஆசிரியையாய்
பார் போற்ற வாழ்ந்து இன்னுயிர் நீத்து
காவியமான எங்கள் குடும்பத் தலைவிக்கு
இம் மலரை காணிக்கையாக்குகிறோம்.

குடும்பத்தினர்

# அமரர் திருமதி சந்திரகாந்தி பிரபாகரன்
## அவர்கள்

அன்னை மடியில்
14. 05. 1964.
கொக்குவிலில்



அமலன் அடியில்
18. 03. 2015.
இலண்டனில்

## திதிவெண்பா

சீர்நிறை ஜய வருட பங்குனித்திங்கள்
நான்காம் நாள் அபரபட்ச திரயோதசி திதி தனில்
சந்திரவதனச் சந்திரகாந்தி
ஏகினாள் விநாயகரின் விந்தங்களிற்கே

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்னை அணிந்தவனே
மன்னே மாமனியே மழுபாடியள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லாம் இனியாரை நினைக்கேனே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
 பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
 மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
 பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடும்முகம் ஒன்றே
 ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
 குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
 வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
 ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக
தத்துவ வித்துக்கள் அரணாகுக
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்
தீயே யோகப் பரஞ்சோதி யாகும்

# சிவபுராண சிறப்பு வெண்பா

*திருச்சிற்றம்பலம்*

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**

## அழுகணிச் சித்தர் பாடல்கள்

ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊற்றைச் சடலம் விட்டே என் கண்ணம்மா!
உன் பாதஞ் சேரேனோ!

வாழைப் பழந்தின்றால் வாய்நோகுமென்று சொல்லி
தாழைப்பழம் தின்று சாவெனக்கு வந்ததடி
தாழைப்பழத்தை விட்டு சாகாமற் சாகவல்லோ
வாழைப்பழம் தின்றால் என் கண்ணம்மா!
வாழ்வெனக்கு வாராதோ!

பையூரி லேயிருந்து பாழூரிலே பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும் என் கண்ணம்மா!
பாழாய் முடியாவோ!

கொள்ள பிறப்பறுக்க - ஆத்தாடி
கொண்டான் குருவாகி
கள்களப் புலனறுக்க - ஆத்தாடி
காரணமாய் வந்தாண்டி

பல்லாருயிர் உணரும் பான்மையென மேல் ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை
Our God is One, Who can be experienced by the vivid souls,
and One Who does not have anyone superior

ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்.
The Eternal, Who is not perceived by the celestials, does not leave the devotees staying as the endless Wisdom!

எங்கும் எவையும் எரியுறுநீர் போல் ஏகம்
தங்கும் அவன் தானே தனி.
Everywhere and in everything, like the heat in the (hot) water,
He, the only One, Who stays, is all by Himself!

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்.
Not of value for those who do not seek; Valuable for those who seek;
Does not waver; His name is Shankara (Meritorious).

உன்னுமுள தையம் இலதுணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து.
It exists to be thought of; Its intelligence has no room for doubt;
Staying in the feeling, incessantly, the Medicine that cures the continuing "beginning".

## திருமந்திரம்

**தீம்புல னான திசையது சிந்திக்கில்**
**ஆம்பு லனாய்அறி வார்க்கமு தாய்நிற்கும்**
**தேம்புல னான தெளிவறி வார்கட்குக்**
**கோம்புலன் நாடிய கொல்லையு மாமே.**

தீயினை கக்கும் புலன் மூலமாக திசை எது என்று சிந்திக்க ஆம் புலனாய் அறிவார்க்கு அமுதாய் நிற்கும். தேன் போன்ற இனமையான புலனாய் தெளிவை அறிபவருக்கு தலைசிறந்த புலனாய் நாடிய இடமாக மாறுமே. பின்குறிப்பு – புலன் வழியே புலப்படுவான் ஏகன்.

**இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி**
**அருள்நீங்கா வண்ணமே ஆதி அருளும்**
**மருள்நீங்கா வானவர் கோனொடுங் கூடிப்**
**பொருள்நீங்கா இன்பம் புலம்பயில் தானே.**

இருளை நீக்கி எண்ணிக்கை அற்ற பிறவிகள் கடந்துவரச் செய்து அருள் நீங்காதபடி ஆதி அருளியது .மருளாகும் அறியாமையை விலக்கிக் கொள்ளாத வானவர் தலைவனோடு கூடிப் பொருள் பற்று நீங்காத இன்பத்தை விருப்பி அனுபவி .பின்குறிப்பு – பிறவி கடப்பதோ, அல்லது இன்பத்தை நுகர்வதோ உன் விருப்பத்தினை ஈசன் அருள்கிறான்

**சாயுச் சியஞ்சாக்கி ராதீதம் சாருதல்**
**சாயுச் சியம்உப சாந்தத்துள் தங்குதல்**
**சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்**
**சாயுச் சியம்மனத் தானந்த சத்தியே.**

# பட்டினத்தார் பாடல்கள்

முன்னை இட்ட தீ முப்புரத்திலே;
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்;
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே;
யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில்; வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ!-மாகக்
குருவிபறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ-சந்ததமும்
உன்னையேநோக்கி உகந்துவரம் கிடந்துஎன்
தன்னையே ஈன்றெடுத்த தாய்?

வீற்றிருந்தாள் அன்னை; வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள்; இன்று வெந்து நீறானாள்; பால் தெளிக்க
எல்லாரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

ஐயுந்தொடர்ந்து, விழியுஞ் செருகி, யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று
வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர், திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

சுடப்படுவா ரறியார் புரம்முன்றையுஞ் சுட்டபிரான்
திடப்படு மாமதில்தென் ஒற்றியூரன் தெருப்பரப்பில்
நடப்பவர் பொற்பாத நந்தலைமேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மனமே, விதியேட்டைக் கிழிப்பதுவே.

## அமரர் சந்திரகாந்தி பிரபாகரன் அவர்களின் வாழ்க்கைச்சுருக்கம்

தமிழும் சைவமும் தழைத்தினிதோங்கிட, கல்வியும் செல்வமும் களிநடனம் புரியும் யாழ்ப்பாணத்தில் உயர்ந்தோர் வதியும் கோயிலாக்கண்டியில் பெருங்குடி தன்னில் பீடுற விளங்கிய சோமசுந்தரம் பகவதியம்மா செய்த இல்லறம் பயனதுவாகவே வந்துதித்தவர் இருவர் இராசேந்திரமொடு சந்திரவதனி. மறுவன்புலவின் கோயிலாக்கண்டி தம்புவும் செல்லமும் அறங்கள் செய்த இல்லறப்பயனாக அவனியில் பிறந்த எழுவரில் ஐந்தாம் மகவான சௌந்தரம் நங்கையை நாடி மணம் முடித்த கல்வயல் தம்பிஐயா இவர்களின் இல்லறப்பயனாக ஏகபுத்திரியாய் வந்துதித்தார் செல்லம்மா. பண்புமிகு இராசேந்திரம் அவர்கள் அன்புமிகு செல்லம்மா அவர்களை மணமுடித்தார்.

ஈடில்லா ஈழமதில், ஈதல் நிறை யாழில், கொக்குவில் கிழக்கு மணியகாரன் ஒழுங்கையில் சைவமும், தமிழும் மணம் கமழும் பெருமைமிக்க மண்ணில், அன்பும் பண்பும் இறைபக்தியும் நிறைந்து வாழ்ந்து வந்த இராசேந்திரம் செல்லம்மா தம்பதியரின் இல்வாழ்க்கையின் சிறப்பாய் அன்போடு பெற்றெடுத்த முத்துக்கள் இரண்டு. மூத்த முத்தாக, அரும் பொக்கிஷமாக வந்து உதித்தவள் சந்திரவதனச் சந்தரகாந்தி. இரண்டாவது முத்தாக சிறப்பாக வந்து உதித்தவன் ஆருயிர்ச் சகோதரன் சந்திரகாந்தன். சந்திரகாந்தி பெயரின் விளக்கமாய் இளமை முதலாக கல்வியில் ஆர்வம் மிகுந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையில் சிறந்த பெறுபேறு பெற்றார். 1985ம் ஆண்டு தனது பட்டப்படிப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறையில் படித்து விஞ்ஞானமானிப் பட்டதாரியானார். 1989ம் ஆண்டு விலங்கியல் துறையில் உதவி விரிவுரையாளராக பதவி ஏற்று கடமையாற்றி வரும்போது முதுவிஞ்ஞானமானி பட்டமும் பெற்று அங்கேயே விலங்கியல் பீடத்தில் விரிவுரையாளராகப் பதவியேற்று பணிபுரிந்து வரும்வேளையில் 1998ம் ஆண்டு ஆவணி மாதம் கொக்குவிலைச் சேர்ந்த நடராசா அருணாசலம், அமரர் பத்மநிதி அருணாசலம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் பிரபாகரனைக் கரம்பிடிக்கக் கருணையுடன் கடவுள் அருள்புரிய, பதிவுத்திருமணத்தை இலங்கையில் செய்துகொண்டு வந்து, இலண்டன் மாநகரிலே 1999ம் ஆண்டு சித்திரை மாதம் 1ம் திகதி திருமணம் செய்தார். கொக்குவில் இந்துவின் பழைய மாணவன்

பிரபாகரன் அக்காலத்தில் சாரணியம் முதல் பல்வேறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் சாதனைகள் படைத்த பெருமைக்குரியவர்.

தம்பதிகள் இருவரும் நல்லறமாம் இல்லற வாழ்க்கையை இனிதே மேற்கொண்டு சிவமுரளீதரன், பிரசாந்தி என்றிரு குழந்தைச் செல்வங்களை பெற்றெடுத்தனர். அன்னார் Queen Mary பல்கலைக்கழகத்தில் MSc.in Clinical Drugs Development ஐயும் படித்து முடித்தார்.

தனது சேவையை பல பேரிற்கு பயனுள்ளதாக்க இவர் பல்வேறு விதங்களிலும் இலண்டனிலே சேவையாற்றினார். அவற்றுள் குறிப்பிடத்தக்க சில சேவைகளானவை: Stratford நூலகத்தில் Chess Club, Homework Club நடாத்தியமை, Eastham நூலகத்தில் Homework Club நடாத்தியமை, Nelson Primary Schoolஇலே வகுப்பறை உதவியாளராக இருந்தமை, Nelson Primary School இலே Good Parenting வகுப்பை நடாத்தியமை, Easthamஐச் சேர்ந்த Primary தொடக்கம் GCE A/L வகுப்புவரை உள்ள உதவி தேவைப்பட்ட மாணவர்களிற்கு கல்வி பயில உதவி செய்தமை ஆகியவை அடங்கும்.

இளமைக்காலங்களில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் சதுர்த்தி, பிரதோஷம், கார்த்திகை, கந்தசஷ்டி தினங்களிலும் விரதம் இருந்து கொக்குவில் மாத்தனைக்கந்தசாமி கோவில், குளப்பிட்டி ஸ்ரீ மகாகாளி அம்மன் கோவில், இராமலிங்கம் கடைவைரவர் கோவில்களுக்கு சென்று தரிசனம் செய்யும் வழக்கத்தை கொண்டிருந்தார்.

இலண்டன் மாநகரில் வாழ்ந்த போதும் மாத்தனை முருகனின் உற்சவ திருக்கோலங்களை இணையத்தளங்கள் மூலமாகவும், முகப்புத்தகங்கள் மூலமாகவும் பார்த்து மகிழ்ந்து பரவசப்பட்டார். 2004ம் ஆண்டு மார்கழி மாதம் 12ம் திகதி தந்தையார் இறைபதம் எய்தியபோதும், 2005ம் ஆண்டு தை மாதம் 20ம் திகதி தாயார் இறைபதம் எய்தியபோதும் அருகில் இருக்ககூடியபோது அருகிருந்து கவனித்து பெற்றோரின் கடமைகளை நிறைவேற்றினார்.

பிள்ளைகள் இருவரையும் பாராட்டிச் சீராட்டி கல்வி புகட்டி வந்த வேளையில் தனது அருமைச் சகோதரனையும் அவர்

ஆசைத்துணைவி கோமதியையும் நீண்ட நாட்களின் பின் தன் இருவிழி தீரக் காண வேண்டும் என்ற அவாவில் தனக்கு இருந்த சிறிய காய்ச்சலையும் பொருட்படுத்தாது 2014ம் ஆண்டு கார்த்திகை மாதம் அரபிக்கடல் கடந்து ‘துபாய்’ நாட்டிற்கு சென்று திரும்பி வந்த வேளை காலம் செய்த கோலமோ! என்ன மாயமோ! தீராத காய்ச்சல் நோய் இவரைப் பீடித்து ‘றோயல் லண்டன்’ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நான்கு மாதகாலமாக செய்த வைத்திய முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. இந்த செய்தி கேட்டு இவரைப் பார்க்கவென இவர் அருமைச் சகோதரன் சந்திரகாந்தன் இலண்டன் ஓடோடி வந்து சேர்ந்தார். சகோதரன் மீண்டும் தன்னிருப்பிடம் ‘துபாய்’ திரும்ப வேண்டும் என்ற செய்தி அருமைச் சகோதரியின் காதில் எட்டிய வேளையில், தம்பியாரின் பயணநாளிற்கு முதல்நாள் பங்குனித்திங்கள் நாலாம் நாள் புதன்கிழமை தான் தவறாது அனுஷ்டித்து வந்த பிரதோஷ நன்நாளில் இறையடி ஏகினார்.

சந்திரகாந்தி பிரபாகரன் வாழும் காலங்களில் தாம் பழகிய நற்பண்பு பழக்கவழக்கங்களால் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரிடத்திலும் நெருங்கிய அன்புகொண்டு விளங்கினார். சிறந்த சமூகத் தொண்டுகளிலும் மனம் சலிக்காமல் ஈடுபட்டார். பிள்ளைகள் வளர்ந்த பின்னர் மேலும் பல சமூகத் தொண்டுகளில் ஈடுபடப் போவதாக அடிக்கடி சொல்லியும் வந்தார். உயர்ந்த உள்ளமும் உன்னத சிந்தனைகளும் கொண்ட திருமதி சந்திரகாந்தி பிரபாகரனின் இழப்பு எவரும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரனது திருவடிகளை அடைந்து இன்புறிருக்க எல்லாம் வல்ல மாத்தனை முருகனை வேண்டி வணங்குவோமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

# கணவனின் அஞ்சலி

காந்தியின் காதலை நம்பிக்
காத்திருந்தேன் கன காலம்
காணாமல் போய்விட்டாய்
என் காதலைப் பொய்யாக்கிவிட்டு
விதி செய்த கோலமென்று
பொய் கூற மாட்டேன்
காதல் செய்த நாடகம் என்று
மெய் கூற மாட்டேன்

கண்ணீர் வற்றி என் உள்ளம்
துடிக்கட்டும் எனச் சென்றாயோ
செந்நீர் சிந்தி என் இதயம்
வெடிக்கட்டும் எனச் சென்றாயோ

காலமெல்லாம் உன் நினைவால் - இவன்
வாடி வதங்கட்டும்
என எண்ணிச் சென்றாயோ
தனிமைக் காட்டில் வெறுமையாக – இவன்
அலையட்டும் எனக்
கோபித்துக் கொண்டு சென்றாயோ
ஆனாலும்
என்னை விட்டு உன்னால் செல்ல முடியாது
என்றும் என்னோடு என்னருகே
நினைவான நிழலாக உயிராக உடலாக
உடலின் ஒவ்வொரு அணுவோடு அணுவாக
என்றும் என்னுடனே நீயிருப்பாய்
எம் பிள்ளைகளின் பணி நிறைவேற்றி
நான் வந்து வாழ்வேன் உன்னோடு நானாக
மீண்டும் உடலோடு உயிராக வாழ
உன்னை நாடி வருவேன்
அதுவரை சாந்தியாய் இரு காந்தி

*துணைவன் பிரபாகரன்*

# From Son

Calling "Chandrakanthy", just a mother blatantly undervalues, the strong relationship I had with her, because in all fairness she was a lot more than a mother to me. She was my best friend, my role model and quite simply the focal reason why I stand here today before you.

For me this whole predicament is something I struggle to get my head around, and it has left me absolutely distraught and ardent for answers. Although thoughts such as her being in unison with god and other members of her family, who left us at an earlier date may offer solace during really upsetting times. The reality that she's no longer with us anymore slowly makes its way across into my mind slowly attenuating all the dreams and desires I developed, crippling them into just an impossible dream. As I grew up I noticed that my mother had a profound inclination for playing with babies and this was clearly stipulated to me throughout my childhoos whenever she earnestly reminisced the wonderful times she had with me and Prasande when we were babies, and I used to imagine how life would be when I was older, coming home from work to a home full of love and watching my mother enjoy herself with grandchildren, but this premature departure has unfortunately demolished this very dream and I simply don't know what to say.
Throughout life I've met quite a lot of people and have been really close with many of them, but one thing's for sure the only stable and consistent affection I will ever have in this world is from my mother and I'm eternally grateful for all the love and support she has given to me throughout my life.

To round of I'd like to wish my mum the very best of luck with her newly found life in heaven; and also thank god for giving me the irreplaceable gift of spending fifteen precious years in her presence.

*Lots of love, from your baby*
*Saranan...*

# Dear Mum,

All I want to say is that I appreciated every moment I had with you. Every minute meant a lot and I am lucky to have a mother just like you but unfortunately the time had come when God wanted you for himself. This was because you weren't any ordinary human being, you were an angel in my eyes and your picture will stay with me forever. Through all my hard times I had someone to turn to and now it won't be so easy, you were the only one who understood my feelings and that can never be replaced. I love you with all my heart and soul and no one can change that. Nothing can bring you back, I know because I have tried but it was better seeing you peaceful in God's hands than seeing you suffer in a hospital bed.

Although someday people might think I'm over the fact that you had died I will really just be keeping you safely tucked in my heart.

You were a great person to the world and no one can deny it. You will be missed by many and if not many remember you will always be missed by your family.

You shall live in the hearts of those who loved you and will never be forgotten.

Rest in Peace Amma.

*Your loving princess:*
*Prasande Pirapaharan*

# Dear Kanthy Acca,

You left us so quickly and unexpectedly. We still had a lot of things we wanted to share......

We miss your soft spoken voice and your whole hearted laugh; during our conversation over the phone on Sundays.

Your presence during our wedding at Malaysia was extremely enjoyable and unforgettable.

We could never forget all the joy and cherished moments during your stay at Dubai.

You were our shoulder to cry on, our advisor, our best friend but most of all you have been a Best Acca for both of us.

We wish we could call you, just to talk and laugh like how we used to do.
Not a day goes without thinking about you. We miss you and our Love grows now and forever.

*From Your Beloved Brother Kanthan and*
*Sister In Law Komathy*

# Smile Till The End..........

Kanthy acca, so this is how it ends with you gone just like that. But you have left behind your strength in all of us I see, especially in your children.

Out of all the qualifications you achieved in your life, the one you were most proud of was being a mother. You were a proud mother and I know you will continue to be proud of you children.

Kanthy acca came into my life in 1999. She is one of the very few relations from my dad's side we know and who we were very close too. Over years she became a sister to me that I never had. When I had my children she was very happy because she became a periyamma. Now where has periyamma gone?? What happened to periyamma??

Kanthy acca I know you missed not having a sister but Kanthy acca you have got more than one sister and they are your sister-in-laws.... I have no words to describe them... They were so desperate to hold you till the last day and not let you go... There wasn't a day they gave up......But Kanthy acca you left everyone, all these beautiful relationships.

Kanthy acca always wanted to achieve something in life... Now what happened...? I never saw her lose until the last day. It will always inspire me, the resilience and courage the power and will that she had. Kanthy acca was well known for her intelligence, her cheerfulness and her smile. Even in the last few days Kanthy acca had the smile and laugh in her face. The smile no one could forget or replace.

Kanthy acca you went to the tallest building in the world Burj Al Khalifa in Dubai. Standing on the 124th floor and you asked if you were standing on the tallest building in the world. You were so happy.

Now you are in even taller place that cannot be reached.. Your trip to Dubai was a remarkable journey in your life and a trip that has left behind a lot of memories.

Now it's all over… You are going to be missed very much by every single one you came across.

Thanks for the memories you have left behind… It'll always be remembered till we meet again Kanthy acca.

*From your beloved Cousin Abirami,*
*Kirusna,*
*Niece Kirisinika and*
*Nephew Abilucksen*

## அன்புள்ள மருமகளுக்கு ஓர் வேண்டுகோள்!

கலங்கரை விளக்காய் காலமெல்லாம் என் மகனுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் ஒளிகொடுப்பாய் என நான் நம்பியிருந்த வேளை கொடிய காய்ச்சல் நோய் உன்னைத் துன்புறுத்தியதோ? சிறுவயது முதல் பரீட்சைகளிலே வெற்றிக்கொடி நாட்டிய நீ இன்று நான்கு மாதங்களாக காலனுடன் போராடி சலித்துப்போய் தோற்று விட்டாயோ? பட்டமரம் நான் இருக்க, பசுமரமான உன்னை காலன் அவன் கவர்ந்து சென்று விட்டான். உன் கணவரையும், குழந்தைகளையும், உடன்பிறப்பையும் ஏமாற்றி விண்ணுலகு சென்றாயோ? உன் உடன்பிறப்பு தனியனாகித் தவிக்கின்றான். அவனுக்கு ஓர் சேயாய் மறுபிறவி எடுத்து தரணிக்கு மீண்டும் வந்துவிடு.

*மாமனார்*
*ந.அருணாசலம்*

## கண்ணீர்க் காணிக்கை

காந்தி என்று செல்லமாக அழைக்கப்படும் சந்திரகாந்தி
செல்லம்மா மச்சாளின் அருமைப்புதல்வி யாழ்
பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறையில் முது
விஞ்ஞானமானிப்பட்டம் பெற்று விரிவுரையாளர் பதவியை
சிறப்பாக வகித்து, பின்னர் இலண்டன் மாநகரில் பிரபாகரனை
மணம் முடித்து, இனிய இரு மக்கட் செல்வங்களை பெற்றெடுத்து
சீர்சிறப்புடன் வாழ்ந்தார்.

மாத்தனைக் கந்தசாமி கோவிலில் மூன்றாம் சோமவாரம் உபயத்தினையும். மார்கழி மாதம், தை மாதம் தாய் தந்தையின் நினைவாக மாத்தனையானுக்கு நைவேத்தியம் ஒழுங்கினையும் தவறாது செய்து வந்தார்.கோணோஸ் மாமா, யோகேஸ் மாமா என்று செல்லமாக எங்களைக் காந்தி அழைப்பது இப்போதும் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

அன்பில் பிறப்பெடுத்து அதிசயத்தில் முத்தெடுத்து
எங்கள் உணர்வுகளின் உறைவிடமானாயே
பண்பின் பதிவெடுத்து பாச மழை தொடுத்து எங்கள்
இதயத்தின் உயித்துடிப்பானாயே
கண்ணில் நீர் எடுத்து கவிதை வரி முடித்து
உந்தன் பிரிவுக்காய் சோகம் சொல்வோமே
விண்ணில் நீ இருந்து ஒளியாய் உறவுகட்கு
நல்வழி காட்டிடுவாய் பாசமிகு காந்தியே

***கோணேஸ் மாமா, யோகேஸ் மாமா***

## பாச மலரே அன்பு நிறைந்த எங்கள் காந்தியே!

ஓய்வெடுக்க விண்ணுலகம் சென்றீரோ
அந்நாளை நினைக்கையில் ஆனந்தம் பெருகிடுதே
இந்நாளில் பிரிவு வந்து எமை எல்லாம் வாட்டுதே
எங்கேதான் சென்றாலும் உம் நினைவில் நாமிருப்போம்
காலங்கள் சென்றாலும் எம் கவலை தீராது
காந்தியே உன் ஆத்மா சாந்தியடைய
நாம் என்றும் பிரார்த்திப்போம்.

*குஞ்சு மாமி*

## அருமை மைத்துனிக்கு

இராசேந்திரம் செல்லம்மா தம்பதியர் பெற்றெடுத்த
தவப்புதல்வியே!
சந்திரகாந்தனின் ஆருயிர் அக்காவே!
எங்களின் மைத்துனியே!
எம் குடும்பத்தில் ஒருத்தியாய் வந்து ஆண்டுகள் பதினேழு
சென்றாலும் இன்றுபோல் பசுமையாய் எம் நினைவுகளில்..........
கொடியநோய் உன்னைச் சிறைப்பிடிக்க வைத்தியர்கள்
கைவிரிக்க ஆண்ட பரம்பரைத் தமிழன் தம்பியவன் தனித்திருக்க
உன் பொக்கிஷமான இரத்தினங்களின் வளர்ச்சி காணாது
தொலைதூரம் கூட்டை விட்டு சிறகடித்து பறந்து விட்டாய்.
ஆறாது எம் துன்பம்; தீராது எம் சோகம் ; மாறாது உம்
நினைவுகள் என்றென்றும்.
ஆண்டவன் அடியில் நீ இருந்து அனுதினமும் உம் குடும்பத்தை
காத்தருள வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*மைத்துனர்கள்*
*அ.கிருபாகரன்*
*அ.திவாகரன்*

# ஆசை அண்ணிக்கு அன்பான இறுதிமடல்

சந்திரோதயமான சந்திரகாந்தியே!
எங்கள் ஆசை அண்ணியே!
உங்கள் பெயருக்கேற்றபோல் எல்லோர்
மனதையும் காந்தம்போல் கவர்ந்தவளே!
அன்பிற்கும், நற்பண்பிற்கும், அனுசரிப்பிற்கும். அமைதிக்கும்
உரித்தான எங்கள் அருமை அண்ணியே!
அண்ணியாக முன்னரே நண்பியானவளே!
எங்கள் அண்ணனையும் உங்கள் உயிரினும் மேலான
முத்துக்கள் சரணன் சத்தியா இருவரையும்
உங்கள் அருமைத்தம்பி காந்தனையும்
தவியாய் தவிக்கவிட்டு உங்கள் கடமைகள் முடியும் முன்னரே
உங்கள் பெற்றோரை நாடி ஓடிய காரணம்
அறியாது நாங்கள் தவிக்கின்றோம்.
உங்களுடன் வைத்தியசாலையில் இராப்பகலாய் நாம்
கழித்தகாலங்கள்தான் உங்களின் கடைசிக்காலம்.
என நாங்கள் நினைத்து இருக்கவில்லை.
வரும் கோடைகால விடுமுறைக்கு எல்லோருமாக சேர்ந்து
கடற்கரைக்கு சுற்றுலா போகவேண்டும் என கதைகள் பல
பேசினீர்
ஆனால் இன்று நீங்கள் எம் இடையே இல்லை என்பதை
எங்களால் நம்ப முடியாதிருக்கிறது.
கடல் மீது நீங்கள் கொண்ட பற்றுதனால்தானோ
அண்மையில் உங்கள் தம்பி காந்தன், மைத்துனி கோமதி உடன்
அரபிக் கடலோரம் சுற்றுலா சென்று உங்கள்
இறுதிக் கால் தடயங்களை பதித்தனையோ?
எம் பிள்ளைகள் எல்லோருக்கும் நீங்கள் பாடங்கள் பல
புகட்டினீர்.
ஆசை மாமியிடம் படிப்பதென்றால் பிள்ளைகள் எல்லோருக்கும்
அலாதிப்பிரியம் ஏனெனில் நீங்கள் ஒருநாளும்
அவர்களை கடிந்து பேசியதில்லையே!
பள்ளிப்பருவம் தொட்டு பல்கலைக்கழகம் வரை நீங்கள் கொண்ட
நண்பர்குழாம் தான் எத்தனை? எத்தனை?
இவை எல்லாவற்றிற்கும் உங்கள்
கைப்பட நீங்கள் எழுதிய கவிதைகளும்,
உங்களது புகைப்படகோர்வைகளும் சான்று பகிர்கின்றன.
இன்று நீங்கள் எம்முடன் இல்லாவிட்டாலும் நீங்கள் எங்களுடன்
பழகியஅந்த இனிமையான நினைவுகளை நினைக்கும்போது
எங்கள் நெஞ்சம் இனிக்கின்றது.

நீங்கள் எங்களிடையே இல்லை
என நினைக்கும்போது எங்கள் கண்கள் பணிக்கின்றது.
எம்மிடையே நீங்கள் இல்லாவிட்டாலும்
எங்கள் எல்லோர் நினைவுகளிலும்
என்றென்றும் நீங்கள் நிலைத்து வாழ்வீர்கள்.
எங்கள் அண்ணனுக்கும் உங்கள் முத்துக்கள் இருவருக்கும்
என்றும் நாங்கள் துணை இருப்போம்.
காலம் காலமாய்க் காத்திருந்து காதலித்தவன்
கரம் பற்றி, கரம் பற்றிய காரணத்தால்
வந்துதித்த பிள்ளைச் செல்வங்கள்
இருவரையும் விட்டு விட்டு நீண்ட தூரம் சென்றதும்தான் ஏனோ?
அன்னை அவளின் முத்தான முத்தங்கள்
காலம் எல்லாம் கிடைக்கும்
என நம்பியிருந்த பிள்ளைகள் ஏங்கித் தவித்திருக்க
காலன் உன்னை அழைத்துச் சென்றதும் தான் ஏனோ?
உன் வாழ்க்கையே வினோதமானது நண்பர்கள் தான் உன் உலகமென்று
நட்புக்கே இலக்கணமாய் திகழ்ந்தவள் நீயல்லவா!
உன்னோடு உறவாடி ஊர் சுற்றித் திரிந்த காலங்கள் தான் இனி வருமா?
கணணியிலே உன் அழைப்பு வரவில்லை என்று ஏங்கிய உன் நண்பர்கள்
உன் பிரிவை நினைத்து நினைத்து ஏங்குவது உனக்கு புரியலையா?
காலன் அவன் காந்தியவளை காவியமாக்கிய காரணம் தான் என்ன?
இளவயதிலே இல்லறத்தில் இணைந்திருக்க வேண்டிய நீ
இவ்வையகத்தை விட்டு வானுலகு நாடி
விரைந்த காரணம் தான் என்ன?
வானத்தில் உலாவரும்சந்திரனைப்போன்று, சந்திரகாந்தியே
நீயும் உலகைச் சுற்றிவர உலாச்சென்றனையோ?
உமது ஆத்மா சாந்தியடைய கொக்குவில் மேற்கு
ஐயனாரை வணங்கி வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

*அன்பான மச்சாள்மார்*
*பிரேமா, இசை, லலி*

# உடன் பிறவா சகோதரியின் நினைவுகளில்.......

"பூவை நீ பூத்திருக்க பார்த்த இடமெல்லாம் பாவை உன்முகம் தெரியுதடி" என் மைத்துனனின் வழித்துணையாய் வந்த சந்திரகாந்தியே! உம்மை நான் சிநேகிதியாய் சந்தித்ததும், உடன் பிறவாச் சகோதரியாய் உறவானதும், நீர் எங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு ஆசிரியையாய் கல்வி புகட்டியதும் இன்றுபோல் இருக்கின்றது.

ஒரு வருடமும் இல்லாத அதிசயமாய் இம்முறை நீர் எம் பிள்ளைகளின் பிறந்தநாள் விழாக்களில் பங்கேற்று உதவிகள் புரிந்து நல்ல சந்தோசமாய் கலகலவென பகிடிகள் சொல்லி சிரித்த சிரிப்பொலி இன்னமும் எங்கள் காதுகளில் கேட்கிறது. நான் நினைக்கிறேன். இதுதான் நாம் மறக்கமுடியாத மகிழ்ச்சியான தருணம் என. திடீரென உமது சுகவீனம் பற்றி அறிந்ததும் ஓடிவந்து எங்களால் முடிந்த உதவிகளை செய்தோம். மாதங்கள் ஓடின. மறுபடியும் சுகமாகி வருவீரென இரவுபகலாக உம் தேவைகளை கவனித்துக் கொண்டிருந்த வேளையிலே ஓர் நாள் "காந்திம்மா காந்திம்மா" என நான் அழைக்க நீர் பார்த்த ஒரு பார்வை இன்றும் என் கண் முன்னே நிழலாடுகிறது. அது ஏன் என்று எனக்கு புரியவில்லை. அதுதான் உமது பிரியா விடைப்பார்வை என அப்போ எனக்கு தெரியவில்லை. உமக்கு நான் கூறியபடி உம் செல்வங்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளைச் செய்திடுவோம். நீர் வானத்தில் விடிவெள்ளியாய் இருந்து உமது பிள்ளைகளை வழி நடத்தி செல்லும்; துணையாக நாம் இருப்போம்.

*நிறோஜனா திவாகரன்*

## எங்கள் உடன் பிறவா சகோதரியே!
## திருமணபந்தத்தினால் உறவானவளே!

படித்தறிந்த செய்திகளை உடனுக்குடன் கணணி மூலமும், கலந்துரையாடும் போதும் பகிர்ந்து கொண்டவளே! உலகை விட்டு நீ போகும் செய்தியை பகிர்ந்து கொள்ள மறந்ததும் தான் ஏனோ? சில மாதங்களாய் உம் வருகைக்காய் நாம் காத்திருக்க காணாமல் போனதும் தான் ஏனோ?

நீர் இவ்வுலகை விட்டு சென்று விட்டாலும் உம் நினைவுகள் என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும். உமை இழந்து பரிதவிக்கும் உம் குடும்பத்திற்கு பக்கபலமாய் நீர் இருந்து வழி நடத்திச் செல்ல எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

*உடன்பிறவா சகோதர,*
*சகோதரிகள்.*




UNIVERSITY OF JAFFNA
SHRI LANKA


UNIVERSITY OF JAFFNA
SRI LANKA








யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை
UNIVERSITY OF JAFFNA
SHRI LANKA







எழுத நினைத்தேன் ஏதாவது
உன் நினைவாய்.... முடியவில்லை..
மனதில் ... எனது மனதிலும் பல எண்ணம் ..
பல கேள்வி...ஆனால் பதில் ஒன்றும் இல்லை
ஏனென்று அறியேன்... தேடினேன் காரணம்..
இன்னுமே நம்ப முடியவில்லை
இன்னுமே ஏற்க முடியவில்லை
நீ எம்மை விட்டு போனாய் என்று
உனது சிரிப்பு கலகலப்பு குறும்பு உயிரோடு
என் முன்னால் நிற்கிறதே. இதுவா காரணம்
என்னால் எழுத முடியவில்லை
இருக்கிறாய் என மனம் நினைக்க
இல்லை என்று மதி சொல்ல
மனம் சூனியமாக இருக்கிறதே
இது கொடுமை நம்பவில்லை நானிதனை
விடை கொடுக்க முடியவில்லை
இன்று நீ போ.... நீ போ
நான் பின் தொடர்கிறேன் என்று சொல்ல.
நண்பியே... உண்மையெனில்....
துக்கம் கடைபிடிக்கப் போவதில்லை
மாறாக உன் நினைவை போற்றுவேன்
உன் பிரிவு வெற்றிடத்தைத் தந்தாலும்
உன் சிரிப்பு கலகலப்பு உன் நினைப்பு
நிறைக்கும் அந்த வெற்றிடத்தை
பதிக்கிறேன் இதனை உன் முகப்புத்தகத்தில்
இங்கோ எங்கோ இருந்து
நீ இதைப் படிப்பாய் என நம்பும் உன் நண்பன்

-புவனேந்திரன்-

# KANTHY SHE BLOSSOMED WITH INTELLIGENCE AND VANISHED IN A FLASH.

She blossomed full of intelligence
With vim and diligence
Speeding her way quickly
Through BSc, MSc and M.Phild
Lecturing at the University
In the Jaffna Campus
She was respected and loved
By all students and members
She was given a scholarship
To do PhD in The U K
She came here  and married Pirapa
Her classmate admirer from Jaffna
The Grant was sadly cancelled
As she would not be returning
As agreed to her homeland
Where she was to be working
This denied her opportunity
Of the PhD she was yearning
But this was set behind
With the arrival of her offsprings
They had two children a boy and a girl
This was a challenge towards her goal
Hoping that her children will one day be able
To fulfill her desires, prooving the role
Never imagining that her life will be so
Leaving her children,her beloved and go
No one could stop her to come back to us
Since God has desired it should be thus
Now let us all pray that her aspirations will be granted
Through her children one day, all that she wanted

MAY HER ATHMA REST IN PEACE

GOD BLESS

*Aunty Rani Thurairetnam and family*


















# Chandrakanthy has been plucked away from us at her prime age of 50.

"God takes away the young who are good, caring and intelligent because He needs them besides him"-ancient saying.

Kanthy has left behind her two children Shivamuralitharan (15) and Prasande(11) as well as her beloved husband Pirapaharan who are devastated by her loss. The large gathering at her funeral showed the devotion and love of her relations and friends. She will also be missed by her only brother Chandrakanthan who flew in from Dubai and visited her just a few hours before she departed from this world.
She attended Kokuvil Hindu College where she excelled as a very bright student. She entered the Jaffna University and did Zoology and passed her M.phild in freshwater biology with flying colours, as a result of which Kanthy was appointed as a lecturer in zoology at the University of Jaffna. It was at KHC that she met and fell in love with a dashing young Pirapaharan. Love blossomed but Pirapaharan had to leave Kanthy behind and come over to London. When the time was right he went back and with the blessings of both families registered their marriage in Jaffna. On arrival in London a second civil wedding was performed on 1.4.1999 which was followed by a Hindu wedding at the Temple.

Although she done an MSC on clinical drug development at Queen Mary University, since there were restrictions on foreign trained graduates at that time Kanthy could not get a lecturer post in London. However, Kanthy embarked on giving private tuition and there are many grateful students who have achieved their potentials through her teaching. She was a good mother to her children and a devoted wife.

Chandrakanthy will be missed not only by her family, but also by her many relations and friends.

May Lord Murugan give her eternal peace at his feet.

*Dr Raj Chandran*
*(Former Mayor Gedling, Nottingham; Commissioner for Racial Equality UK)*











Queen Mary
John Vane
Science Centre
← Clinical Pharmacology
← Seminar Rooms
William Harvey Research Institute →
Lecture Theatres 2 & 3 →
All other Departments →







# Dear Kanthy

We have seen you as a baby and grow up to be a confident intelligent and clever woman heard of your achievements becoming a respected Lecturer in the University.

We attended your marriage to Pirapaharan and blessed you. You have had two lovely children and we have been happy to see your achievements over the years.

Over the last few months our hearts have been saddened over your suffering together with your family we have watched and hoped you would get better .We have admired the support given to you by your loving extended family. Sadly you have been taken away from us.

You would have been proud of the way Pirapaharan has cared for the children over the last few months of your illness and continuing to do so. It is heartbreaking to see that you will not see them grow. We are sure that you will be watching and looking after them from where you have gone and help them achieve every thing you have dreamed for them.
May the almighty God bless your family

*Rani Aunty, Anushya Acca, Thillai Anna*
*Kiruthikah , Muhunthan and Abi*



# எம் சோதரனின் நற்துணைக்கு மனம் தீராத அஞ்சலிகள்........

கடல் கடந்து வந்த செய்தி கனவாகிப் போகாதோ?
கடந்துவிட்ட காலங்கள் மீண்டிங்கு வாராதோ?
கற்ற கல்வி வாழ்வதனில் கனிவுடனே காதல் கொண்டு
களிப்புடனே கைப்பிடித்த கண்ணியமாய் வாழ்ந்தவன் - நீ
பண்ணிய நற் புண்ணியத்தால் இரு கண்ணான மழலைகளை
பொன்னாகப் பெற்றெடுத்து பேருவகை கொண்டு பெரும்
பேறாக வாழ் நாளில் பேரிடியாய் வீழ்ந்ததுவோ?
நற்பேரான நின் துணையாள் நிஜமாக நினைவழிந்த – துயர்
நிலையற்ற வாழ்வினிலே நிலைதடுமாற வைத்ததுவோ?
ஆலமரமாக அழகு நிழல் பரப்பி நின்ற சோலை வனமொன்று
சோகத்தில் ஆழ்த்திவிட்டு சொல்லாமல் சென்றதெங்கே?
பந்த பாசமுள்ள பண்புள்ளம் கொண்டவனே!
தொந்தரவு இல்லாத – எம் தொப்புள் கொடி உறவே!
இணைபிரியா வாழ்வினிலே இதமான செல்வங்கள் - இருவரையும்
நிந்தனக்குச் சொத்தாகக் கையளித்து
பித்தாப்பிறை சூடியோன் பொற்பாதம் சரணடைந்தார்.
சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!
"எப்பவோ முடிந்த காரியம் ஒரு பொல்லாப்புமில்லை"
"எல்லாம் சிவமயமே"

அன்னாரின் பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அவரது இன் ஆத்மா உமை, சிவனின் பாதார விந்தங்களில் ஆதாரம் அடைய வேண்டி நிற்கின்றோம்.

*இவ்வண்ணம்*
*த.ஒளிவண்ணன் (குடும்பத்தினர்)*
*கொக்குவில்*





# Chandrakanthy - a cherished colleague

It was with shock and tremendous sadness that we learned that Chandrakanthy ( Chandrakanthy Pirapaharan). A former colleague and friend of Department of Zoology, University of Jaffna passed away on 18th March 2015 in London after a brief illness.

Chandrakanthy was a Zoology Special undergraduate student at the University of Jaffna from 1985-1989 and then worked as a Research Assistant in Zoology from 1990 – 1994. During this time she worked for her postgraduate degree in Limnology with limited resources and logistic difficulties. She was awarded with an M.Phil in 1994 and her research work was highly appreciated by the experts. Later she was recruited as Lecturer (Probationary) in Zoology in 1996. Department of Zoology fondly remembers her contribution to the Department. She worked hard and rendered her valuable services to the University Community during 1990s - the most difficult period of the people of the North.

She has been considered by her colleagues as a beautiful human being. In good times and bad, she smiled and laughed and inspired others with her warmth and kindness. "What counts in life is not the mere fact that we have lived. It is what difference we have made to the lives of others that will determine the significance of the life we lived". We recall these words of late Nelson Mandela and fondly remember Chandrakanthy and thank God for her blessed life. Chandrakanthy - a caring and beloved mother, an academic and a friend - will always be remembered by those who were fortunate enough to have known her.

*Head & Staff*
*Department of Zoology*
*University of Jaffna*
***Dr. (Mrs.) R.Gnaneswaran***
***Senior Lecturer & Head***



# Dear Friends,

We all have personal and special memories of Chandrakanthy and we should focus on the happiest times she brought to us rather than the fact that she is no longer with us.

When I first met Chandrakanthy, nearly thirty years ago, at the university of Jaffna, she had a tiny figure with a strong personality. Few of us call her 'kutti' . What do I remember most about her? Her determination, her hard work, her willingness to share her knowledge and mentoring us when we don't focus in our careers. Despite our lack of interest in zoology she helped many of us to do well in spot tests and pass the exams.

When she is not focused on her work, we often see her funny side. We enjoy her company as she laughs and entertains us in parties, a memory we will cherish with us forever.

When I met her in the UK after many years she brought all those recollections including the photos taken many years ago. She uploaded most of them for many to share with a title of 'malarum ninaivukal. From her we learned the importance of cherishing old memories. Every picture she shared, she kept the memories alive, and ensured we never forgot our time together.

She has been a caring mother and wife and we hope she will guide her family spiritually to a promising future. You have been an inspiration to us all.

**Dearly loved and sadly missed forever.**

**Alex Nicholas**
**On behalf of her University of Jaffna batch-mates (1985 -1989)**

# A Silent Star Shone, but Passed Away Too Soon

Mrs. Chandrakanthy Pirapaharan (nee Rajendram)
Dear young student, How are you?
What made you become all so blue?
Did decades make your superb brain
That stood out a shining star,
As you entered the portals, not in vain
The cream of the country's intellect,
That made you reach the top, not far.
Qualified to follow "Special Zoo".
The number of peers was so very few.
You progressed wonderfully in research;
And even helped me-your guide-in a way,
And shone with flying colours in B.Sc., I say.
Your thirst for the best ,made you follow
An M.Phil. in research with success in the same
Tertiary Institute of Jaffna's fame.
And as still a student co-authored
And published many a 'paper' in the field with me
On 'Fresh water Ecology'- your own forte.
To see the other side of you a rather shy young lass,
Aiming high and persevering with determination
Among all other, that needs to get to the ladders top
A friend to all with a pleasing smile
And a very loyal and devoted student to your teachers
But that best brain's cover had indeed let you down.
May your good soul rest in peace!

*Your M. Phil. Supervisor & later colleague*
*Mrs. Navamany Selvarajah B.Sc.Hons. (Special. Cey.), M.Sc. London., FRES*
*Retd. Professor & Dept. of Zoology, University of Jaffna, Sri Lanka.*

# சந்திர காந்தியின் நினைவாக

பல்கலைக்கழகத்தில் மாணவியாய் வந்தாய்!
பட்டம் பெற்ற பின் சக ஊழியராய் இணைந்தாய்!
பக்கத்து அறைகளில் நம் ஆராய்ச்சி தொடங்கியது,
பழக ஆரம்பித்தோம் பண்பான நட்போடு!
இடைநடுவில் பிரிந்தோம் இருள் சூழ்ந்த தேசத்தில்!
இரு தேசம் சேர்ந்தோம் ஊர் பிரிந்த நாளதனில்!
இணைவோம் என்று எண்ணாத வேளையொன்றில்
இனியவளே தேடிவந்தாய் முக நூலில் வழியமைத்து!
ஐந்தாண்டின் முன்னே மே மாதம் தன்னில்
அமைத்தாய் பாதையொன்று, அன்புக்கு பாலமிட்டாய்!
அசைந்தாடி மீண்டும் மீட்டோம் நினைவுகளை
அன்று முதல் நீயே எல்லோர்க்கும் ஒளியானாய்!
பழைய புகைப்படங்கள் பசுமை நினைவளிக்க
பகிர்ந்தாய் அத்தனையும் கண்கள் பனிக்க வைத்தாய்!
பசுமை நினைவுகளை எம்மனதில் பதியமிட்டாய்!
பண்போடு நண்பர்களை எமக்கும் தெரிய வைத்தாய்!
விலையற்ற உன் சிரிப்பு விளக்காய் சுடர் விடுமே
விலங்கியல் துறை முழுதும் கலகலக்க அதிர்ந்திடுமே!
"குட்டியோ?" என்று கோபமுடன் தலைவரவர்
விட்டெறியும் சொல் கூட விலகிடுமே உன் சிரிப்பில்!
மார்கழியில் நானறிந்தேன் மனதொடிய உன் நோயை!
சேரும் என்று ஒரு சேதி நான் அனுப்பிக் காத்திருந்தேன்!
வரும் சேதி தனைப் பார்த்து உடன் பதிலை அனுப்பும் நீ,
வர முடியா வாசலுக்குள் போன கதை தானறிந்தேன்!
நம்ப முடியவில்லை, நண்பர்களைக் கேட்டேன்.
நலம் கேட்க உந்தன் உறவுகளைத் தேடினேன்.
நாடினாய்! மீளாத துயில் தேடிக் கொண்டாய்!
நம்பவே முடியவில்லை, எப்படி மனங்கொண்டாய்?
சாந்தமாய் வாழ்ந்தவளே சந்திரகாந்தி!
காந்தமாய்க் கவர்ந்தவளே கனிவான மொழியரசி!
காலம் கூடியதோ? கண்ணீர் தனைத் தந்தாய்.
காந்தி! இறையடியில் நீ பெறுவாய் சாந்தி!

*அன்புடன்*
*ரஜினி தயானந்தன்*

# My Dearest Friend,

Chandrakanthy, you and I have been the best of friends since we were undergraduate students. I remember how much you loved everyone and made us all laugh.
There was always joy and happiness amongst our batch mates when you were around. You spread joy in everything you did. Not only did you excel in your studies, but also did much charity work in Jaffna during difficult times. Your creation of" Malarum ninivugal" is a source of happy memories amongst our friends.

You set the example of what a good wife, mother and friend should be. It is hard to accept that you are gone, but your family and friends will always treasure the memories we have of you.

*By Dhevahi Niranjan and friends*
*University of Jaffna*

# சந்திரகாந்தி **Miss,**

உங்களின் பேச்சொலி இன்னும் எங்களின் காதுகளில் ஒலிக்கிறது.
எங்கேயாவது விரைவில் நாம் சந்திக்கலாமே என்று எங்களை அவசரப்படுத்தியதன் காரணம் ஏனோ அன்று புரியவில்லை.
கடைசியில் உங்களின் இறுதிச்சடங்கில் எங்களை சந்திக்க வைத்துவிட்டு நீங்கள் மீளாத்துயில் அடைந்துவிட்டீர்கள்.
நாங்கள் மிகவும் மனம் வருந்துகிறோம்.
நீங்கள் எம்மீது காட்டிய தூய்மையான அன்பிற்கு எமது நன்றிகள்.
உங்களது தெளிவான பேச்சால் எங்களை வழி நடத்தியதற்கும், ஆதரவு தந்தமைக்கும் எமது நன்றிகள். உங்களின் ஆத்மா இறைபதமடைய எமது பிரார்த்தனைகள். உங்கள் குடும்பத்தாரிற்கு எங்கள் கண்ணீர் அனுதாபங்களை சமர்ப்பிக்கிறோம்.

*உங்களின் அன்பு நண்பிகள்*
*வளர்மதி, சில்வறீன்*
*(விலங்கியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்)*

## அமரராகி விட்ட
## எங்கள் சந்திரகாந்தி Miss,

கலகல என்று சிரிக்கும் சந்திரவதனம். அன்பாகவும், பண்பாகவும் பழகும் இயல்பு, உதவி செய்யும் நல்ல குணம், sense of humour எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவர் எங்கள் Miss. அவருக்கும் எனக்கும் இடையேயான நட்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணவி என்று தொடங்கி சக விரிவுரையாளராகி பின்பு குடும்ப நண்பர்களான 20 வருடங்களுக்கும் மேலாக வளர்ந்து முடிந்து விட்டது.

அவருடன் பழகிய காலங்கள் பசுமரத்து ஆணிபோல என்றும் பசுமையானவை. 1995ம் ஆண்டு யாழ் இடப்பெயர்வின்போது Miss உம் அவர் பெற்றோரும் எமக்கு தங்க இடம்தந்து அரவணைத்து எமது வாழ்நாளில் மறக்கமுடியாத நன்றிக்கடன். 1997க்குப் பின் நாங்கள் வாழ்ந்த நாடுகள் வேறுபட்டாலும் எங்கள் நட்பு குறையவில்லை.

2012ம் ஆண்டில் Miss மற்றும் அவர் கணவர், குழந்தைகளை அவர் இல்லத்தில் இராப்போசனத்துடன் சந்திக்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவே எமது இறுதிச்சந்திப்பு ஆகும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. Miss நோய்வாய்ப்பட்ட செய்தி கேட்டதும் அவர் நலம் பெற வேண்டி பிரார்த்தித்ததை தவிர வேறு எதுவுமே செய்ய முடியவில்லை. பல பேருக்கு கல்வி கற்பித்த குரு தன் குழந்தைகளின் நல்வாழ்வை காணாது இறையடி சேர்ந்தது மிகவும் துயரமானது. தரணியில் எல்லோரையும் தவிக்கவிட்டு இளமையில் பரமனடி சேர்ந்த எங்கள் அன்பு சந்திரகாந்தி Miss இன் ஆத்மா சாந்தியடையவும், அவரது மறைவால் தவிக்கும் அவர் குடும்பத்தினருக்கு இழப்பைத்தாங்கும் மனவலிமையை கொடுக்க வேண்டி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி!

*நீங்காத நினைவலைகளுடன்*
*ஞானபோதினி குடும்பத்தினர்*
*அவுஸ்திரேலியா*

# In loving memory of Shiva's Mum

I know that you're gone and you're gone for good
It's hard to accept, but now I've understood
Nothing lasts forever, even if it's good or it's bad
Now you're up in heaven; it makes me feel glad
That finally your pain and sadness has ended
Just like the way God had intended
you've helped me so many times
whether it be education or life
you took me to the O2 and you've completed my life
Auntie Auntie you were a great women
You taught me maths and you taught me life
There is only one person that praised so much
So rest in peace
You earned your sleep
You will be deep in our hearts
So rest in peace rest in peace
We'll mourn you with our love

*From Logan, a family friend*

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 . 05 . 1964 | 18 . 03 . 2015 |

கொக்குவில் இந்துவின் புதல்வனும் ப.மா.சங்கம்(ஐ.இ) உபதலைவருமாகிய திரு N.A.பிரபாகரன் அவர்களின்
பிரிய பத்தினி
அமரர் திருமதி. சந்திரகாந்தி பிரபாகரன் அவர்களின்
(கொக்குவில் இந்துவின் புதல்வி, முன்னாள் விரிவுரையாளர்–உயிரியல் துறை யாழ் பல்கலைக்கழகம்)
இறைபதம் எய்தியசெய்தியறிந்து கொக்குவில் இந்து அன்னைசிந்தும்

கண்ணீர்க் காணிக்கை

கொக்குவில் இந்து மைந்தன் குவலயம் போற்றிட
அக்கறைகொண்டெழுந் தரும்பணியாற்றியவா
தக்கதோர்பள்ளிமேல் தாகமேகொண்டுழை
பக்கவேர் என்றிட்டோம் பிரபாகரன் பணியால்

பல்துறை வளர்ச்சிகாணப் பற்றுடன்ஏழைமாணவர்
அல்லலைத் திர்க்கநிதியும் ஆறுதல் வார்த்தையோடு
தொல்புகழ் கல்லூரிக்குதெளிவுறக் கற்றல்மேன்மை
நல்லுளத்தாலேயளித்தாய் நாளுமேயுதவும்நோக்கில்

செய்திடு பணிக்குப்பலமாய் சேர்ந்தனள் சந்திரகாந்தி
தெய்வமாய் கல்வி தந்தஅன்னைக்கு உரமேயிட்டாள்
கையினில் வெண்ணையாகிகணந்தோறும் கூடிவாழ்ந்த
பையவேகண்கள் மூடி பற்றறுத் தெங்கே சென்றீர்

செய்திகள் காதில்எட்டசேர்ந்தழும் துயரத்தாலே
பொய்யது.ஆகாதோவென்று புறம்புறம் பேசி நின்றோம்
தெய்வமேகலங்கிப்போச்சே தென்றிசைவேந்தனாலே
கைதொழுதேற்றுகின்றோம் கட்டுக பதமேபற்றி

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!

கல்லூரிச்சமூகம்
கொக்குவில் இந்துக் கல்லூரி

வே.ஞானகாந்தன்
அதிபர்

# கொக்குவில் இந்து அன்னையின் தவப்புதல்வி

தோற்றமும் மறைவும் இவ்வுலகின் தொல்வியல்பு. ஆனாலும் அமரர் சந்திரகாந்தி பிரபாகரனது மாயப்பிறப்பறுப்பும், மானிடத்தின் பற்றறுப்பும் எம்மவர்க்கு மறக்க முடியாததொன்றாகவும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவும் எம்மனதில் பதிந்து விட்டது.

கொக்குவில் இந்து மணிமகுடத்தில் ஒரு மாணிக்கமாய்ப் பிரகாசித்தவர் எம் இந்து மாதவர்க்கு ஓர் எடுத்துக் காட்டான மாணவியாகவும் விஞ்ஞான விந்தையிலே இந்துவின் மாணவியாய் காவியம் படைத்தவர். தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் அறிவுச்சுடர் ஏற்றும் யாழ் பல்கலைக்கலையில் பயின்றது மட்டுமல்ல அங்கு ஆசானாகவும் அரும் பணியாற்றியவர்.

கனவிலும் நினைவிலும் கொக்குவில் இந்துக்கல்லூரியின் மேன்மைக்காய் முழுமனதோடு சேவையாற்றும் இந்துவின் மைந்தன் பிரபாகரனை காதலுடன் கைப்பிடிக்க பல்லாயிரம் மைல்கள் கடந்து இலண்டன் மாநகர் வந்தடைந்தார்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சேவையிலும் கல்லூரியின் வளர்ச்சியிலும் நிலைக்களனாய் விளங்கிய பண்பாளரான இவரது மறைவு குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கொக்குவில் இந்து சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். ஒரு நல்ல பெண்மணியை இழந்தது எமது துரதிஷ்டமே.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**பழைய மாணவர் சங்கம், ஐக்கிய இராச்சியம்**
**கொக்குவில் இந்துக்கல்லூரி**

# KOKUVIL,THAVADY AND NANTHAVIL
WELFARE ASSOCIAITION

www.ktnwa.org.uk

**President**
Dr. P. Arumugaraasaah

**Vice Presidents**
Mr.S. Rasaiyaah
Mrs.D. Sukumar
Mr. N. A. Pirarapaharan

**Secretary**
Mr. S. Sukumar

**Assitant Secretary**
Mr. R. Karunakaran

**Membership Secretary**
Mr.V.Tharmarajah

**Treasurer**
Mrs. S. Renukanthan

**Assitant Treasurer**
Mr .N. Zenthil

**Committee Members**
Mr.S. Thedchenamoorthy
Dr.P. Vivekananthan
Mr. Muhunthan
Mrs.G.K. Chettiar
Mrs.S. Elangaratnam
Mrs.T. Singam
Mr. Nathivaharan
Mrs.T. Santhakumar
Mr.P. Balakumar
Mr.K. Ganeshalignam

Audior
Mr.R. Sukunanantharajah

Address
KTNWA
Carcheck Building
17 Stone field Close
Ruslip, Middlessex
HA4 0XT U.K

## Ohm Shanti

**Dear Mrs Chandrakanthy prabaharan**
**We will miss your smile**
**We will miss your hospitality**
**We will miss your divine face**

**A flower in our garden fallen down**
**A bird from our cage flown away**
**A music in our ears gone mute**

**Gone far away from us**
**You left too early**
**So treacherous the death is**
**To wretch havoc in a lovely family**
**We remember you forever**
**Unendingly we mourn**
**Vestige of your charm**
**Remains here forever**

**Death is not the end of the world**
**It is a sun set for a new rise**
**But the darkness created by**
**Chandrakanthy's demise is hard to bear**

**Death is not the end of the light**
**but turning a switch off**
**for a new turning on**
**But the darkness left by Chandrakanthy**
**is hard to enlighten**
**But we hope that we all meet you again**
**some day some where**
**Until then**
**let us pray for Praba, Shivamurali and pirashanti**

Tribute to Chandrakanthy Pirapaharan

Mrs Chandrakanthy Pirpaharan was also lovingly known as Kanthy. Her death is a great loss not only to her family but also to our Tamil Community.

"Death is but a passage from this life to the next. It is the change from old to new", Gita says.

At birth, each one of us has received a ticket to the event of death and we are now on the scheduled journey. Every birthday takes us closer to the end of our journey. Whatever the struggles, safeguards or precautions you take, the place has to be reached someday. Everything may be uncertain in this world but death is certain. Whoever is born has to die at some stage or another. This is the law of Nature. The medical profession had tried hard to keep her in this world for more years, but could not beat destiny. However, while you are here do your duty and serve God through service to all living beings. Kanthy had been serving god by helping the poor and the needy through her voluntary service. She was fortunate to complete her Karma early and reached the lotus feet of Lord Siva, but those who were very unfortunate, lost Kanthy at her young age.

I have known her since she got married to Pirapaharan. Her husband was almost a fulltime social worker looking after the welfare of the people of Eastham, mainly the Tamil community and Kanthy fully supported her husband's commitment to the community. She is a well-educated girl holding postgraduate degrees. In the midst of her social service, she acquired additional higher qualifications in this

country. She had been sharing her acquired knowledge to our youngsters by conducting tuition classes.

She had been a life member of Kokuvil Hindu College Old Students Association (KHCOSA),and been an active helper at all its events. Also, she had been an active member of Kokuvil Thavady Nanthavil Welfare Organisation (KTNWA), and been a regular helper at its events. Although she did not show off her presence at KHCOSA and KTNWA events, she was one of those who worked hard behind the screens. I recently discovered that she had been conducting homework classes for youngsters at the local community centres.

Our community will be missing her services. May her soul rest at the lotus feet of Lord Shiva.

Dr.P.Arumugaraasah
Chairman

36 High Street, Colliers Wood, London SW19 2AB.

t: 020 8542 3285 f : 020 8542 3289w : www.sltwg.org.uk e : reception@sltwg.org.uk

INVESTORS IN PEOPLE | Silver

Registered Charity No: 1077602 Company Ltd by Guarar



உ
முருகன் துணை

கொக்குவில்

# மாத்தனைக் கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை

Kokuvil

# Mathanai Kanthasuwami Kovil Paripalana Sabi

Champion Lane,
Kokuvil East,
Kokuvil.

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

10-04-2015

## சிந்தையெலாம் இறையருள் கொண்டு வாழ்ந்த சந்திரகாந்தி

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்று கூறிப் போந்தான் செந்நாப்புலவன் திருவள்ளுவன். இந்தப்பூவுலகிலே நல்வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கையிலேயே இளையவயதினில் சகோதரி சந்திரகாந்தி அவர்கள் இறைபதம் அடைந்தமை எம்மனைவருக்கும் மிகுந்த மனவருத்தமே.

சிறிய வயது முதலே இறை வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கையுடன் கண்ணியம் மிக்க வாழ்வுதனை வாழ்ந்து வந்த சந்திர காந்தி அவர்கள் எமது ஆலயத்தின் பரிபாலனசபையின் ஓர் ஆயுட் கால அங்கத்தவர் என்பதுடன் மூன்றாவது சோமவாரத் திருவிழா (கார்த்திகை மாதத்து மூன்றாவது திங்கட்கிழமை) உபயகாரரும் ஆவார்.

கொக்குவிலில் இருந்த காலத்தில் வெள்ளிக்கிழமை வேல்த்திருவிழா முதல் கோவிலில் நடைபெறும் திருவிழாக்களில் பக்தியுடன் கலந்து கொண்டவர். கடந்த பதினான்கு ஆண்டுகளாக இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த போதிலும் மாத்தனை முருகனது உற்சவ தினங்களின் போதெல்லாம் அவருடைய எண்ணம் எல்லாம் கோவிற் சூழலிலேயே இருக்கும்.

விஞ்ஞானத்துறைப் பட்டதாரியாக இருந்தும் மேலைத்தேய நாட்டில் வசித்து வந்த போதிலும் எமது மதம், மொழி ஆகியவற்றின் மரபு வழியில் ஆத்மார்த்தமாக ஐக்கியப் பட்டிருந்தவர்.

சிந்தையிலே இறையருளைக் கொண்டிருந்த அன்புச் சகோதரியின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் சோதரியின் ஆத்மா எல்லாம்வல்ல முருகப்பெருமான் பாதங்கள் அடைந்து பெருவாழ்வு வாழ வேண்டுகிறோம்.

பரிபாலன சபையினர்
மாத்தனை

# You were a great Chiththi

It's true what they say about not knowing what you've got until it's gone. You were a great chiththi, and I see that now in retrospect, I see that you cared a lot more than I realised at the time. I regret that throughout the past few years we didn't get to speak as much, but I am thankful for everything you've done for me, from tutoring me, to buying chocolates that I like for when I would come over, I'm just sorry that I never had the chance to thank you for everything.

*By Maylorn Thivaharan*

# Dear Asai Mamee,

Asai mamee, why did you have to leave at such a time when you were most cared for. We were devastated by hearing of your death, however we whole heartedly understand why God took such an amazing, peaceful and kind hearted person like you as they say only the good die young.

There are numerous, unforgettable and cheerful moments where you have provided us with laughter and tears of joy. Oh! Asai Mamee you were such a creative, intelligent and caring person who only saw the good in people. There was a time where you had invited us to play and learn chess with other children. You taught us the main rules required to play, it was more than just playing chess but doing something that increases your learning ability. Playing and learning chess was an educational and joyful experience in our lives. You were an incredible teacher and an admirable one too. We were utterly amazed at how much you knew as you taught us all three subjects; Maths,English and Science. You were an awesome teacher who let us take breaks and play with Shiva and Prasande.

We all enjoy your chicken wings, that was our starter dish every time we came to your house. It was either Shiva or Prasande to keep a timer on them. Once they were out, they were gone within minutes. Even though the wings are from Iceland, we only seem to enjoy them when they were served by you.

No one comes close to your fish curry, it's just the way we like it, spicy and scrumptious. Sadly this was one of the last dish you had cooked us before you left for Dubai. Its unforgettable how you cooked us our favourite dish just before you left.

Asai mamee we still cannot believe that you have left us however we know that you're in a better place alongside god and many other beautiful souls. Hopefully you will watch over us and lead us down a successful path. We miss you with all our hearts and we wish that you were still here with us. We will always leave a space for you in our hearts and you will never be forgotten. Lastly we would like to thank you for all the memorable and loving things you have done for us. May your beautiful soul rest in paradise.

*Love,*
*Jathu, Mazhalini, Santhana and Divya.*

## அன்பு மருமக்களின் ஆதங்கம்

எங்களின் அன்பு நிறைந்த "ஆசைமாமியே" எங்கள் எல்லோரையும் தவியாய் தவிக்கவிட்டு நீங்கள் மட்டும் தனியாக சென்றதுதான் ஏனோ? பிள்ளைகளின் மனம் அறிந்து கல்வி கற்றுக் கொடுப்பதில் உங்களைப்போல் வேறு எவராலும் முடியாது. எங்கள் அனைவரையும்'Dockland O2' கேபிள் காரில் ஏற்றிச்சென்று காட்டியதும் நேற்றுப்போல் இருக்கின்றது. ஆனால் இன்று எங்கள் ஆசைமாமியை நாம் இழந்து அழும்குரல் உங்களின் காதினில் கேட்கிறதா, உங்களின் அன்புக்கணவன் எங்கள் ஆசைமாமா காத்திருக்க நீங்கள் எங்கு சென்று மறைந்து விட்டீர்கள்? நீங்கள் மென்பந்தாட்டத்தில் கொண்ட பற்றுதனினால் உங்களின் ஆசை மகனிற்கு முரளிதரனின் பெயரோடிணைத்து "சிவமுரளீதரன்" என்றும் நீங்கள் சத்தியசாயிபாபா மீதுகொண்ட பக்தியினால் அருமை மகளிற்கு "பிரசாந்தி" என்றும் நாமம் சூட்டி வீட்டிலே "சரணன்", "சத்தியா" எனவும் ஆசையாக கூப்பிட்டு வந்தீர்கள். இன்று அவர்கள் உங்களைத்தேடி கதறியழுது கூப்பிடும் அவர்களின் குரல்கள் உங்களுக்கு கேட்கவில்லையா? ஐயோ! ஆசைமாமி எங்கள் எல்லோரையும் தவியாக தவிக்க விட்டுவிட்டு நீங்கள் நீண்டதூரம் சென்றதுதான் ஏனோ? நீங்கள் வைத்தியசாலையில் இருந்து

சுகமாகி இன்று வருவீர்கள் நாளை வருவீர்கள் என நான்கு மாதங்களாக காத்திருந்த எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் மீளாத்துயில் கொண்டதும் தான் ஏனோ, எங்கள் தாயார் சொல்லுவார் "உங்களின் ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதியான குணத்திலும், கண்அழகிலும், கூந்தலின் அழகிலும் தான் காதல் கொண்டு விழுந்தான் உங்கள் ஆசைமாமா" என, நீங்கள் இருவரும் திருமண பந்தத்தில் இணைந்து பதினேழு ஆண்டுகள் சென்றாலும் காதலித்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதுவே. உங்களின் அருமைத்தம்பி காந்தனின் வருகைக்காக காத்திருந்து காந்தன் வந்ததும் உங்களின் வாழ்வை நிறைவு செய்த அதிசயம் தான் என்னே?

உங்களின் மறைவால் வாடி நிற்கின்ற ஆசைமாமாவையும் அருமையான பிள்ளைச் செல்வங்களையும் அனுதினமும் ஆண்டவன் சந்நிதியில் நீங்கள் வீற்றிருந்து வழிநடத்தி பாதுகாருங்கள். நாங்களும் அவர்கள் மூவரையும் கவனமாகப் பார்ப்போம். உங்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


*உங்களின் அன்பான மருமக்கள்*
*சரங்கினி பகலவன்*
*பரவசன் பகலவன்*
*சாகித்தினி பகலவன்*
*தசானி பகலவன்*

## என் அன்புத் தோழியே...

வழிமேல் விழிவைத்திருப்பது நட்பு!
என் அன்பை அடகு வைக்கிறேன்.
உன் மனதைக் கடனாகக்கொடு!
வாழ்க்கை முழுவதும் வட்டி கட்டுகிறேன்.
நட்பாக நானிருந்து...
என் நினைவாக உன்னிடம் ஒன்றுமில்லை!
என்னிடம்
உன் நினைவைத்தவிர ஒன்றுமில்லை!
ஒரு நொடி சிரித்து
மறுநொடி அழுகிற ஆனந்தம் காதல்.
ஒரு நொடி சிரித்து
மறுநொடி தோளோடு தோள் கொடுக்கிற
ஆனந்தம் நட்பு!
நீ விரும்பும் உயிருக்கு உன் அன்பு புரியாது
உன்னை விரும்பும் உயிருக்கு
உன்னைத்தவிர வேறொன்றும் தெரியாது.
என்னை மறந்து நான் தூங்கிய தூக்கம்
கருவறையில்தான்!
உன்னை மறந்து நான் தூங்கும்தூக்கம்
என் கல்லறையில்தான்!
உன்தோள் சாய்த்திட என் ஏக்கம்
என் மனதுக்குத்தான் வெளிச்சம்!
உனது கண்கள் கலங்கிய பின்புதான்
எனது கண்களில் தூசுவிழுந்ததை
நான் உணர்ந்தேன்!
நீ வருவாய் என நான் இருந்தேன்
ஏன் மறைந்தாயென பதில் சொல்
அன்புத்தோழி......

***துணைவன் பிரபாகரன்***

# வம்சாவழி


சோமசுந்தரம்
பகவதியம்மா
தம்பிஐயா
சௌந்தரம்
இராசேந்திரம்
சந்திரவதனி
+
கந்தையா
சந்திரராணி
சிவபாலன்
சிவதாசன்
சிவநாயகி
செல்லம்மா
அருணாசலம் + பத்மநிதி
கிருபாகரன்
+
தவமலர்
அருள்நிதி
+
ஜீவானந்தன்
இசைவாணி
+
நிர்மலன்
லலிதா
+
பகலவன்
திவாகரன்
+
நிறோஜனா
பிரபாகரன் + சந்திரகாந்தி
சந்திரகாந்தன்
+
கோமதி
சிவமுரளீதரன்
பிரசாந்தி
ஹரிணீ
கஜானன்
சான்றோன்
மேலோன்
ஜதார்த்தனன்
மழலினிருக்மா
சந்தனருக்மா
டிவ்ய ருக்மா
சரங்கினி
பரவசன்
சாகித்தினி
தஷானி

## உணர்வுகளின் மொழியே காதல்!

எனக்கு பிடித்தவைகளே
உனக்கு பிடிக்கவேண்டும்
என்பதல்ல காதல்!
உனக்கு பிடிக்காதவைகள்
எனக்கு பிடித்திருந்தும்!
என்னை பிடிக்கும் என்பாயே
அதுவே காதல்!

உன்னை பற்றி நானும்
என்னை பற்றி நீயும்
தெரிந்து கொள்வதல்ல காதல்!
நம்மைப் பற்றி நமக்கே
தெரியாதவைகளை
தெரிய வைப்பதே காதல்!

எல்லைகளை மீறுவதல்ல காதல்!
நமக்குள் எல்லையே
இல்லாமல் இருப்பதே காதல்!
கற்பு நெறிக்கு உட்பட்டதல்ல காதல்!
கற்புக்கு நெறிமுறைகளை வகுத்ததே காதல்!
நட்பை விட உயர்ந்ததா
தாழ்ந்ததா என்பதல்ல காதல்!
நட்பைத் தன்னை விட
உயர்ந்த இடத்தில் வைத்து
பெருமைப்படுத்துவதே காதல்!
மொழிகளால் உணர்ந்து
கொள்ளக் கூடியதல்ல காதல்!
உணர்வுகளின் மொழியே காதல்!

*துணைவன் பிரபாகரன்*



திருமதி
அவர்கள்
மையன்று
த்துயரில்
கொண்ட
றிந்ததும்,
தறிந்ததும் எம்துயரத்தில்
தோர்க்கும், தங்கள் ஆழ்ந்த
சி, மின்னஞ்சல், முகநூல்,
அனைவர்க்கும், இலங்கையில்
பிரசுரித்த கொக்குவில்
னாரின் மரணச்சடங்கில்
ர், நண்பர்கள் எல்லோருக்கும்
ங்கள் அனுப்பியோர்க்கும்
ரையின் போதும் பின்னரும்
ள சிறப்புற ஒப்பேற்றிய
ன் ஆத்மசாந்தி வேண்டி
னை செய்த சைவமுன்னேற்ற
இந்துக்கல்லூரியின் பழைய
(ஐ.அ) இப்புத்தகத்தை
ரு.தர்மராஜா அவர்களுக்கும்,
rs ற்கும் எங்களின் எல்லாத்
ன்று உதவிய உற்றார்,
லார்க்கும், அமரர் திருமதி
பெயரால் உருவாக்கப்பட்ட
புரிந்தோர்க்கும், இன்று
நினைவு நிகழ்ச்சியில்
, சிற்றுண்டிகள் வழங்கிய
மனமார்ந்த நன்றிகள்.
றி கூறத் தவறியிருந்தால்
உளம்கனிந்த நன்றிகளை
ள்கிறோம்.

# The Chandrakanthy Foundation



**Family and friends of Mrs Chandrakanthy Pirapaharan decided toform a charity in the name of her and named it as The Chandrakanthy Foundation. This charity will help needy people in our motherland in many ways.**

**We earnestly request all the well wishers to donate to The Chandrakanthy Foundation.**


Family and friends of
Mrs Chandrakanthy Pirapaharan

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**





Designed & Printed @ JR Print-London, www.jrprint.com T : 0208 503 6643